# பெரியாழ்வார் திருமொழி 1-7
## தொடர்சங்கிலிகை
(தளர்நடை நடத்தல்: தளர்நடைப் பருவம்)

86 * தொடர் சங்கிலிகை சலார்பிலாரென்னத் * தூங்கு பொன்மணி ஒலிப்ப *
படுமும்மதப் புனல் சோர * வாரணம் பைய நின்று ஊர்வது போல் **
உடன்கூடிக் கிண்கிணி ஆரவாரிப்ப * உடைமணி பறை கறங்க *
தடந்தாளிணை கொண்டு சார்ங்கபாணி * தளர்நடை நடவானோ (1)

87 செக்கரிடை நுனிக்கொம்பில் தோன்றும் * சிறுபிறை முளை போல *
நக்க செந்துவர்வாய்த் திண்ணை மீதே * நளிர் வெண்பல் முளையிலக **
அக்குவடமுடுத்து ஆமைத்தாலிபூண்ட * அனந்த சயனன் *
தக்கமா மணிவண்ணன் வாசுதேவன் * தளர்நடை நடவானோ (2)

88 மின்னுக்கொடியும் ஓர்வெண்திங்களும் * சூழ் பரிவேடமுமாய் *
பின்னல் துலங்கும் அரசிலையும் * பீதகச் சிற்றாடையொடும் **
மின்னில் பொலிந்ததோர் கார்முகில் போலக் * கழுத்திணில் காறையொடும் *
தன்னில் பொலிந்த இருடீகேசன் * தளர்நடை நடவானோ (3)

89 கன்னற் குடம் திறந்தாலொத்தூறிக் * கணகண சிரித்து வந்து *
முன்வந்து நின்று முத்தம் தரும் * என் முகில்வண்ணன் திருமார்வன் **
தன்னைப் பெற்றேற்குத் தன் வாயமுதம் தந்து * என்னைத் தளிர்ப்பிக்கின்றான் *
தன்னெற்று மாற்றலர் தலைகள் மீதே * தளர்நடை நடவானோ (4)

90 முன்னலோர் வெள்ளிப் பெருமலைக் குட்டன் * மொடுமொடு விரைந்தோட *
பின்னைத் தொடர்ந்ததோர் கருமலைக் குட்டன் * பெயர்ந்தடி இடுவது போல் *
பன்னி உலகம் பரவியோவாப் * புகழ்ப் பலதேவன் என்னும் *

தன் நம்பியோடப் பின்கூடச் செல்வான் * தளர்நடை
நடவானோ (5)

91 ஒருகாலில் சங்கு ஒருகாலில் சக்கரம் * உள்ளடி பொறித்து
அமைந்த *
இருகாலும் கொண்டு அங்கங்கு எழுதினாற் போல் * இலச்சினை
பட நடந்து **
பெருகா நின்ற இன்ப வெள்ளத்தின் மேல் * பின்னையும் பெய்து
பெய்து *
கருகார்க் கடல்வண்ணன் காமர் தாதை * தளர்நடை
நடவானோ (6)

92 படர் பங்கயமலர் வாய் நெகிழப் * பனி படு சிறு துளிபோல் *
இடங்கொண்ட செவ்வாயூறியூறி * இற்றிற்று வீழ நின்று **
கடுஞ்சேக்கழுத்தின் மணிக்குரல் போல் * உடைமணி
கணகணென *
தடந்தாளினை கொண்டு சார்ங்கபாணி * தளர்நடை
நடவானோ (7)

93 பக்கம் கருஞ்சிறுப்பாறை மீதே * அருவிகள் பகர்ந்தனைய *
அக்குவடமிழிந்தேறித் தாழ * அணியல்குல் புடை பெயர **
மக்கள் உலகினில் பெய்தறியா * மணிக்குழவி உருவின் *
தக்கமா மணிவண்ணன் வாசுதேவன் * தளர்நடை நடவானோ (8)

94 வெண்புழுதி மேல் பெய்து கொண்டளைந்ததோர் * வேழத்தின்
கருங்கன்று போல் *
தெண்புழுதி ஆடித் திரிவிக்கிரமன் * சிறுபுகர் பட வியர்த்து *
ஒண்போதலர் கமலச் சிறுக்காலுரைத்து * ஒன்றும் நோவாமே *
தண்போது கொண்ட தவிசின் மீதே * தளர்நடை நடவானோ (9)

95 திரைநீர்ச் சந்திர மண்டலம் போல் * செங்கண்மால் கேசவன்
தன் *
திருநீர் முகத்துத் துலங்கு சுட்டி * திகழ்ந்தெங்கும் புடை
பெயர **
பெருநீர்த் திரை எழுகங்கையிலும் * பெரியதோர் தீர்த்த பலம்
தருநீர் * சிறுச் சண்ணம் துள்ளம் சோரத் * தளர்நடை
நடவானோ (10)

96 ***** ஆயர் குலத்தினில் வந்து தோன்றிய * அஞ்சனவண்ணன்

தன்னை *
தாயர் மகிழ ஒன்னார் தளரத் * தளர்நடை நடந்ததனை **
வேயர் புகழ் விட்டுசித்தன் * சீரால் விரித்தன உரைக்க வல்லார் *
மாயன் மணிவண்ணன் தாள் பணியும் * மக்களைப் பெறுவார்களே (11)